**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2016**

**A051 மொழிவரலாறு – 1**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. கிளைமொழி தோன்றுவதற்கான காரணங்கள் யாவை?
2. சொல்லைக் குறிக்கும் வேறு சொற்கள் யாவை?
3. தென் திராவிட மொழிகள் எண்ணிக்கையைக் கூறுக.
4. உருபன் என்றால் என்ன?
5. மொழிநூலார் மெல்லினத்தை எவ்வாறு அழைப்பர்?
6. தொல்காப்பியர் காலத்தில் புள்ளி இட்டு எழுதப்பட்ட உயிரொலிகள் யாவை?
7. வினைமுற்று எத்தனை வகைப்படும்? அவை யாவை?
8. சங்க காலத்தில் வியங்கோள் வினைமுற்றுகள் வரும் இடங்கள் யாவை?

9. இலக்கியச் சான்றுகளே அன்றிப் பல்லவர் காலத் தமிழை அறிய உதவும் வேறு சான்றுகள் யாவை?
10. சோழர் காலத்து இலக்கண நூல்கள் யாவை?
11. வடமொழிச் சொற்கள் தமிழாக்கம் செய்யப்பட்டமைக்கு இரு சான்றுகள் தருக.
12. தமிழில் புகுந்த மூன்று மராட்டிய மொழிச் சொற்களைக் குறிப்பிடுக.
13. தமிழ்மொழி எந்த எழுத்து முறையில் எழுதப் பெறுகிறது?
14. பெரியார் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தம் ஒன்றைக் குறிப்பிடுக.
15. மணிப்பிரவாளம் – பொருள் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. மொழியின் வகைப்பாட்டினை விளக்கியுரைக்க.
2. இந்திய மொழிகள் எவ்வாறு பகுக்கப்படுகின்றன? விளக்குக.
3. ஒலிகளின் பாகுபாட்டினை வகைப்படுத்தி எடுத்துரைக்க.
4. சங்கம் மருவிய காலத்தமிழில் மொழி முதல் எழுத்துக்களில் நிகழ்ந்த மாற்றங்கள் யாவை?
5. பல்லவர் காலத் தமிழில் நிகழ்ந்த மாற்றங்களை எடுத்துரைக்க.
6. மராட்டியர் காலத்தில் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலந்தமையை எடுத்துரைக்க.
7. மின்னணு ஊடகங்களில் தமிழ் நிலைபெற்ற தன்மையினை விவரித்துரைக்க.
8. இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வடிவங்களை விளக்கியுரைக்க.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) தென் திராவிட மொழிகள் யாவை? விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழ் மொழி வரலாற்றினை அறிவதற்கு உறுதுணைபுரியும் அக, புறச் சான்றுகளை எடுத்துரைக்க.

2. (அ) தொல்காப்பியர் காலத் தொடரியல் கோட்பாட்டினை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) சோழர் காலத் தமிழ்ச் சொல்லியல் வரலாற்றை விளக்குக.

3. (அ) தமிழ் வரிவடிவ வரலாற்றை விவரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழ் உரைநடையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விரிவாக எழுதுக.